திரு. வி. கே. கோதண்டராமன்: சார், திருவண்ணாமலைப் பகுதியிலும், செய்யாறு போன்ற பகுதிகளிலும் இது போன்று கோமாரி தொத்து நோய் ஏற்பட்டது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதன் விளைவாகப் பல ஆடு மாடுகள் இறந்திருக்கின்றன. ஆனால், அரசாங்கத்திற்கு ரிபோர்ட்டு வராமல் இருக்கலாம். இதை முன் கூட்டியே உணர்ந்தாவது தடுப்பு ஊசிகள் போட்டுத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, திருவண்ணாமலை, செய்யாறு பகுதிகளில் கோமாரி நோய் வந்ததாக இல்லை. வேறு சில நோய்கள் வந்திருப்பதாகத்தான் இருக்கிறது. தொண்டை அடைப்பான் நோய், குதிரை நோய், அம்மை நோய் போன்ற நோய்கள் வந்து கால்நடைகள் பாதிக்கப்படுகின்றன. தடுப்பு ஊசிகள் போடப்பட்டு, அவைகள் பாதுகாக்கப்படுகின்றன.

திரு. இல. பலராமன்: வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர் தாலுகாவில் தொண்டை அடைப்பான் நோய் வந்து கால்நடைகள் பாதிக்கப்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதற்கு வேண்டிய மருந்துகள் இல்லை என்று கால்நடை விஸ்தரிப்பு அதிகாரிகள் கூறுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதை நிவர்த்திக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அரசாங்கத்தினிடம் உள்ள தகவல்படி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, கால்நடைகளுக்கு ஊசி குத்தப்பட்டு அந்த வியாதிகள் குறைக்கப்படுகின்றன, தடுக்கப்படுகின்றன என்றுதான் செய்தி இருக்கிறது.

Steel Tube Plant

*14 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether there are proposals under the consideration of the Government to locate a seamless steel plant in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு செ. மாதவன்: (அ) ஆம். இந்திய அரசு நிறுவனமாகிய திருச்சிராப்பள்ளி "பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ்" நிறுவனத்துடன் கூட்டு முயற்சியாக, இம் மாநிலத்தில் "வெட்டு வாயில்லாத உருக்குக் குழாய்த் தொழிற்சாலை ஒன்றை (Seamless Steel Tube Plant) நிறுவுவதற்கு இந்திய அரசின் அதிகார பத்திரத்தைப் பெற வேண்டி, தமிழ்நாடு அரசிற்கு முழுவதும் சொந்தமாகிய தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் இந்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது.

(இ) திட்டமிடப்பட்ட இந்தத் தொழிற்சாலையின் நிறுவப்பட்ட திறனளவு ஆண்டொன்றுக்கு சுமார் 60,000 டன்கை இருக்கும். கொதி கலன்களுக்கும் இரசாயனத் தொழிற்சாலைகளுக்கும்

1970 ஆகஸ்ட் 25]

சாதாரணமாக குழாய்கள் பொருத்துவதற்கெனத் தேவைப்படும் 20 மி.மீ. முதல் 200 மி.மீ. வரை விட்டம் உள்ள 'வெட்டு வாயில்லாத உருக்குக் குழாய்களை' இத் தொழிற்சாலை தயாரிக்கும். இந்த செயல்திட்டத்திற்காக ரூ. 18 கோடி அளவிற்கு மூலதனம் தேவைப்படும் என்று எதிர்பார்க்கபடுகிறது.

தமிழ் நாட்டில் புதிய சர்க்கரை ஆலைகள்

* வினா 15. திரு. கொளத்தூர் கோதண்டம்:

திரு. என். எஸ். வி. சித்தன்:

திரு. வை. சுவாமிநாதன்:

திரு. ஆர். கருப்பையா

மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969-70, 1970-71 ஆண்டுகளில் தமிழகத்தில் புதிதாக எத்தனை சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1969-70-ல் மத்திய அரசு இரண்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கு இரண்டு அதிகாரம் பத்திரங்களை வழங்கியிருக்கிறது. 1970-71 மற்றுமொரு ஆலைக்கு வேண்டிய அதிகாரப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, தற்போது இயங்கி வரும் சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி அதிகமாகி, சர்க்கரை அதிகமாகத் தேங்கிக் கிடப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, இன்னும் புதியதாக ஆலைகளை ஏற்படுத்தி அதனால் வருகிற சர்க்கரையை எப்படி விற்பது என்று அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுது 'ஷுகர் சர்ப்ளஸ்' இடைக் காலத்தில் ஏற்பட்டது உண்மை. அது நிரந்தரமான சர்ப்ளசாக இருக்காது என்று நாங்கள் கருதுகிறோம். இன்னும் ஏராளமாக நம்முடைய நாட்டில் உபயோகப்படுத்துவதற்கும், பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் வாய்ப்பு இருப்பதினால், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் இன்னும் அதிக சர்க்கரை ஆலைகள் ஆரம்பிப்பதில் தவறு இல்லை என்று இந்த அரசாங்கம் கருதுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: 1969-70-ல் இரண்டு ஆலைகளும், 1970-71-ல் ஒரு ஆலையும் ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவைகளில் உற்பத்தி தொடங்கப்பட்டுவிட்டதா? தொடங்கவில்லை என்றால், எப்பொழுது தொடங்கப்படும்? தற்பொழுது தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் கரும்பு சர்க்கரை ஆலைகளுக்குப் போதுமானதாக இருக்கிறதா? அல்லது அதிகமாக இருக்கிறதா?